2005 மார்ச் 22]

திரு. கே.சி. கருணாகரன்: முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு விஷயம். மணல் விஷயம் சம்பந்தமாக அரசு 7 மடங்கு லாபம் சம்பாதிக்கிறது. மிக்க மகிழ்ச்சி, வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். இந்தக் கொள்ளைகள் தடுக்கப்பட்டால் இது இன்னும் பல மடங்கு அதிகரிக்கும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். Court உத்தரவு வாங்கியதன் மூலமாகவே சில பேருக்குக் கொள்ளை அடிப்பதற்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைத்துவிட்டதாக அர்த்தமில்லை. அதைத் தடுக்க வேண்டும். அரசு கைப்பற்ற வேண்டும். முறைகேடுகளை ஒழிக்க வேண்டும். நன்றி.

6. அறிவிப்பு

நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம். சிவபுண்ணியம் பேசுவதற்கு முன்னால் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 7–4–2005 அன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ள மானியக் கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம், பேரவையின் ஒப்புதலோடு 11–4–2005 அன்று மாலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

கோரிக்கை எண் 20 – நெடுஞ்சாலைகள் துறை

கோரிக்கை எண் 23 – உள் துறை – சிறைச்சாலைகள் – தொடர்ச்சி

கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசன், என்ன?